இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

ஞாயிற்றுக்கிழமை 02.03.2025

# அவரே தலைவர்! அவரே முதல்வர்!



**அவரைத் தலைவராக ஏற்றுக் கொண்டதன் மூலமாக திராவிட முன்னேற்றக் கழகம் பெருமை அடைந்து கொண்டிருக்கிறது!**

**அவரை முதலமைச்சராக ஏற்றி வைத்த மகிழ்ச்சியை தமிழ்நாடு அடைந்து கொண்டிருக்கிறது!**

**மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட இரண்டு மாபெரும் மகுடங்களையும் மிகக் குறுகிய காலத்தில் மிகச் சிறப்பாக நிறைவேற்றிக் காட்டி தலைநிமிர்ந்து நிற்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தையும், தமிழ்நாட்டையும் தலை நிமிர்ந்து நிற்க வைத்து விட்டார்கள்.**

**அவரைப் போல இருப்பாரா? இவரைப் போல முடியுமா? என்ற கற்பனை ஆரூடங்கள் மூலமாக அவரை மட்டம் தட்டும் முயற்சிகள் அப்போது நடந்தன. அதனை அவர் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. கெடுமதியாளர்களது கெட்ட எண்ணங்களுக்குத் தீனி போடாமல் அவர் தனது பயணத்தைத் தொடங்கினார். 'அவருமல்ல, இவருமல்ல, நான்.. நான் மட்டும்தான்' என்பதைச் சொல்லாமல் சொன்னார் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்ட மு.க. ஸ்டாலின்.**

ஐம்பது ஆண்டு காலத் தலைமைப் பதவியில் இருந்து மறைந்தார் தமிழினத் தலைவர் கலைஞர். அந்த இடத்தை இட்டு நிரப்புவது என்பது சாதாரண சாமானியக் காரியம் அல்ல. அரை நூற்றாண்டுகால நிரூபிப்புக் காலம் அது. இவர் தன்னை நிரூபிக்க வேண்டிய இடத்தில் இருந்தார். இதுதான் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இருந்த மிகப்பெரிய நெருக்கடி ஆகும்.

நெருக்கடி காலத்தில் (1976) கைதானதால் தியாக அரசியலுக்குள் வந்த தளபதி அவர்கள், நெருக்கடியான நேரத்தில் (2018)தான் தலைவராகவும் ஆனார். 'அவர் மறைந்தார் – இவர் வந்தார்' என்று 'ஏழுக்கு அடுத்தது எட்டு' என்பதாக இல்லாமல், தனது இலக்கை மிகமிகப் பெரியதாக அமைத்து எல்லோரையும் அண்ணாந்து பார்க்க வைத்தார் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

தி.மு.க.வின் தலைமைப் பதவிக்கு வந்த அன்றே, 'இந்தியாவுக்கு காவிச் சாயம் அடிக்க நினைக்கும் மோடியை வீழ்த்த வா!' என்று போர் பிரகடனம் செய்த அன்றுதான் அவர் கழகத் தளபதியில் இருந்து தமிழ்நாட்டுத் தளபதியாக – ஆனார். பெரியார் – அண்ணா – கலைஞர் ஆகிய மூவரின் வார்ப்பு இவர்தான், மூவரின் இன்றைய முகம் இவர்தான், அவர்கள் இல்லை என்று நினைக்க முடியாது, இதோ இவர் இருக்கிறார் என்பதைக் காட்டினார்.

**2019 தேர்தலில் தி.மு.க.வை மூன்றாவது பெரிய கட்சியாக நாடாளுமன்றத்தில் அமர வைத்தார். நம்மை எதிர்க்க எதிரிகளே இல்லை என்ற இறுமாப்பில் இருந்த பா.ஜ.க. தலைமைக்கு எதிராக 'இந்தியா' கூட்டணியை உருவாக்கி மோடிக்கே பயத்தைக் காட்டினார். மைனாரிட்டி ஆட்சியை, நிதிஷ் – சந்திரபாபு தயவில்தான் இன்று மோடி நகர்த்திக் கொண்டிருக்கிறார். அதற்கான விதையைப் போட்டதன் மூலமாக 'இந்தியாவுக்கான தளபதியாக' உருப்பெற்று நிற்கிறார் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

இவை வெறும் அரசியல் – தேர்தல் வெற்றியாக முற்றுப்பெற்றுவிடவில்லை. திராவிட நாயகன் மு.க.ஸ்டாலின் பேசும் சமூகநீதியை இன்று இந்தியா பேசுகிறது. அவர் பேசும் மாநில சுயாட்சியின் குரல் இன்று இந்தியா முழுமைக்கும் கேட்கிறது. மொழிப்பற்றும் – இன உரிமையும் – கூட்டாட்சிக் குரலும் இந்தியா முழுவதும் கேட்கிறது. **'திராவிட மருந்து' இன்று இந்தியா முழுமைக்கும் பரவி வருவதற்குக் காரணம் – முழுமுதல் காரணம் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் தான்.**

'ஏன் எதையும் தமிழ்நாடு மட்டும் எதிர்க்கிறது?' என்று கேட்டவர் மத்தியில், 'இதோ இந்தியாவின் பல மாநிலங்கள் சேர்கிறது' என்று காட்டியவர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். மோடியை எதிர்ப்பது, பா.ஜ.க.வை வீழ்த்துவது என்பது கொள்கைப் பூர்வமாக இருக்க வேண்டுமேதவிர, வெறும் தேர்தல் கால கோஷமாக முடிந்துவிடக் கூடாது என்பதை திரும்பத் திரும்ப இந்தியத் தலைவர்களுக்கு உணர்த்திக் கொண்டிருக்கிறார் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.

முதலமைச்சராக அவர் பொறுப்பேற்கும் போதும் அவரைச் சிலர் கணிக்கத் தவறினார்கள். அந்தக் கணிப்புகளுக்கு நான்கே ஆண்டுகளில் பதில் அளித்து விட்டார்.

தமிழ்நாட்டை இந்திய நாட்டின் இரண்டாவது வளர்ந்த பொருளாதார மாநிலமாக உயர்த்திவிட்டார். தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.4 விழுக்காடாக இருந்த தமிழ்நாட்டின் பங்கை கடந்த நான்கு ஆண்டுகளில் 9.21 விழுக்காடாக உயர்த்திவிட்டார். ஐ.நா. வளர்ச்சிக் குறியீடுகளாக இருந்தாலும், ஒன்றிய பா.ஜ.க. அரசின் பொருளாதாரக் குறியீடுகளாக இருந்தாலும் அனைத்திலும் தமிழ்நாடு அதிக அளவிலான வளர்ச்சியைப் பெற்றுள்ள மாநிலமாக உயர்த்திக் காட்டிவிட்டார்.

வறுமைக் குறியீடுகளில் இந்தியாவின் சராசரி விழுக்காடு என்பது 14.96 ஆக இருக்கும்போது தமிழ்நாடு 2.2 விழுக்காடாக இருக்கிறது என்ற சூழலை உருவாக்கி விட்டார். பட்டினிச் சாவு இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கி விட்டார். இந்தியாவில் அதிக தொழில் நிறுவனம் உள்ள மாநிலமாக, அதிக தொழிலாளர் உள்ள மாநிலமாக, அதிக பெண் தொழிலாளர் உள்ள மாநிலமாக மாற்றி விட்டார். ரூ.10 லட்சம் கோடிக்கும் மேலான தனியார் முதலீட்டுத் திட்டங்கள் வருவதை உறுதி செய்து கொடுத்துவிட்டார். தனியார் துறைகளில் அதிகப்படியான வேலை வாய்ப்புகளை உருவாக்கிக் காட்டி விட்டார். இந்தியா முழுமைக்குமான பணவீக்கம் அதிகமாகி வரும்போது தமிழ்நாட்டுக்கு மட்டுமான பணவீக்கத்தைக் குறைத்துக் காட்டி விட்டார்.

**பெண்களின் பொருளாதாரத்தை 'உரிமைத் தொகை' மூலமாகவும் 'விடியல் பயணம்' மூலமாகவும் உயர்த்தி விட்டார். இளைஞர்களை அனைத்து வகைகளிலும் திறமையாளர்களாக உயர்த்திக் கொண்டிருக்கிறது 'நான் முதல்வன்'. மாணவியருக்கு 'புதுமைப் பெண்' திட்டமும், மாணவர்க்கு 'தமிழ்ப் புதல்வன்' திட்டமும் மிகப்பெரிய உயரத்தை அடைய அடித்தளம் அமைத்து வருகிறது. 'காலை உணவுத் திட்டம்' பள்ளிக் குழந்தைகள் உடலை உறுதி செய்கிறது. இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.**

அவர் தலைவரானபோது சந்தேகம் கிளப்பியவர்கள், அவர் முதல்வரானபோது நம்பிக்கை கொள்ளாதவர்கள் இன்று அதிகமாக அவரைப் புகழ்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

'அவரே தலைவர்' என்கிறார்கள்!

'அவரே முதல்வர்' என்கிறார்கள்!

**உழைப்பு அவரை உருவாக்கியது. உண்மை அவரை உயர்த்திக் காட்டி இருக்கிறது. 72 ஆவது பிறந்தநாள் கொண்டாடும் தலைவரை, முதல்வரை முத்தமிழறிஞர் கலைஞரின் மூத்தபிள்ளையாம் 'முரசொலி' வாழ்த்தி வணங்குகிறது!**

## இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம் – 5

# அன்னைத் தமிழே! சூளுரைக்கிறேன்!



**நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் தொடர் மடல்.**

**தமிழ்நாடு காட்டுகின்ற பாதையே ஒவ்வொரு மாநிலமும் தன் தாய்மொழியைக் காப்பதற்கான பாதை.** ஆதிக்க மொழிகளை அடையாளம் கண்டு, அவற்றின் வலையில் வீழாமல் தடுத்துப் பயணிக்கும் பாதை என்பதை பஞ்சாப், தெலுங்கானா மாநில அரசுகளின் அறிவிப்பு உறுதி செய்திருக்கிறது.

பஞ்சாப் மாநிலத்தை ஆள்கின்ற 'ஆம் ஆத்மி' கட்சி அரசு வெளியிட்டுள்ள உத்தரவில், தனது மாநிலத்தில் உள்ள அனைத்து வகைப் பள்ளிகளிலும் பஞ்சாபி மொழியை முதன்மையாகவும் கட்டாயமாகவும் கற்றுத் தர வேண்டும் எனத் தெரிவித்துள்ளது. தெலுங்கானா மாநிலத்தை ஆள்கின்ற காங்கிரஸ் அரசின் சார்பில் வெளியாகியுள்ள உத்தரவிலும், ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை தெலுங்கு மொழியைக் கட்டாயமாகக் கற்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எதற்காக இந்த திடீர் அறிவிப்பு?

> **எதிர்கால மாணவச் சமுதாயத்தினர் தாய்மொழியாம் தமிழைக் கற்க வேண்டியது மிகவும் அவசியம்.**

மாநில மொழிகளை வளர்ப்பதற்கும், பரவச் செய்வதற்கும்தான் தேசிய கல்விக் கொள்கை மூலம் மும்மொழித் திட்டத்தைச் செயல்படுத்துகிறோம் என்று **ஒன்றிய பா.ஜ.க. அரசு சொல்வது பச்சைப் பொய் என்பதை பஞ்சாப், தெலுங்கானா மாநிலங்கள் அம்பலப்படுத்தியுள்ளன.**

ஒன்றிய அரசின் பாடத்திட்டத்தின் கீழ் செயல்படும் சி.பி.எஸ்.இ. பள்ளிகளில், பத்தாம் வகுப்புக்கு இரண்டு முறை பொதுத்தேர்வு நடத்துவது தொடர்பான வரைவு வெளியிடப்பட்டபோது அதில் மாநில மொழிகள் பலவும் விடுபட்டிருந்தன.

இது குறித்து பஞ்சாப் மாநில கல்வித் துறை அமைச்சரிடமிருந்து எதிர்ப்புக் குரல் வெளியான பிறகே, சி.பி.எஸ்.இ. வரைவுப் பட்டியல் முழுமையானதல்ல என்றும், எந்த மாநிலத்தின் மொழியையும் எடுக்கவில்லை என்றும் விளக்கமளிக்கப்பட்டது.

**இந்தியையும் சமஸ்கிருதத்தையும் திணிப்போம். மாநில மொழிகள் அனைத்தையும் வெறுப்போம் என்பதே பா.ஜ.க.வின் மறைமுக மொழிக் கொள்கை. இதனை நேரடியாகத் தோலுரித்துக் காட்டிய மாநிலம் தமிழ்நாடு.** அதன் வழியில் சகோதர மாநிலங்களும் தங்கள் தாய்மொழியைப் பாதுகாக்கும் அரண் அமைக்கும் சட்ட வழிகளை மேற்கொண்டு வருகிறது. ஒரு மாநிலத்தில் பல வகையான பாடத்திட்டங்களைப் பின்பற்றக்கூடிய பள்ளிகள் உண்டு. எந்த வகைப் பாடத்திட்டத்தைப் பின்பற்றக்கூடிய பள்ளிகளாக இருந்தாலும் அந்தந்த மாநிலங்களின் தாய்மொழி என்பது முக்கியமானது. அதனை **இன்று பஞ்சாப்பும், தெலுங்கானாவும் உணர்ந்து உத்தரவிட்டிருப்பதை, இருபது ஆண்டுகளுக்கு முன்பே தொலைநோக்குப் பார்வையுடன், "தமிழ்நாட்டில் ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரையிலான அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் ஒரு மொழிப் பாடமாகக் கற்றுத் தரப்பட வேண்டும்" என சட்டமாக நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர்.**

எதிர்கால மாணவச் சமுதாயத்தினர் தாய்மொழியாம் தமிழைக் கற்க வேண்டியது மிகவும் அவசியம் என்ற தெளிவான பார்வையுடன் நிறைவேற்றப்பட்ட அந்தச் சட்டத்திலும், நம் உயிர்நிகர்த் தலைவர் கலைஞருக்கேயுரிய நடைமுறை எதார்த்தத்துடனான கருணை

**உங்களில் ஒருவன்**

யும் வெளிப்பட்டது. தாய்மொழியைக் கற்பதாக இருந்தாலும்கூட அதனை வலிந்து திணிக்கக்கூடாது என்ற முறையில், முதல் ஆண்டில் ஒன்றாம் வகுப்பு எனத் தொடங்கி பத்தாண்டுகளில் பத்தாம் வகுப்பு வரை அனைத்துப் பள்ளி மாணவர்களும் தமிழைக் கற்றாக வேண்டும் என்கிற வகையில் அந்தச் சட்டத்தை நிறைவேற்றினார். தமிழாகவே வாழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞரின் சட்டத்திற்கு நீதிமன்றங்களும்கூட தடை விதிக்கவில்லை.

தமிழ்நாட்டில் சி.பி.எஸ்.இ. பள்ளிகளாக இருந்தாலும், வேறு வகை பாடத்திட்டங்களைக் கொண்டுள்ள பள்ளிகளாக இருந்தாலும் தமிழ் மொழியைக் கற்றே ஆக வேண்டும் என்ற நிலையை நம் உயிர்நிகர்த் தலைவர் கலைஞர் அரசு உருவாக்கியதால்தான், பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வுக்கான வரைவை வெளியிட்ட சி.பி.எஸ்.இ., அதில் பிற மாநில மொழிகளைத் தவிர்த்திருந்த போதும் தமிழைத் தவிர்க்க முடியாத நிலை உருவானது. தமிழ்நாடு வகுத்த பாதையில் மற்ற மாநிலங்களும் தங்கள் தாய்மொழியைக் கட்டாயமாக்கும் உத்தரவை வெளியிட்டு வருகின்றன.

"இந்தி பேசாத மாநில மக்கள் விரும்புகிறவரை ஆங்கிலம் நீடிக்கும்" என்ற, முதல் பிரதமர் நேருவின் உறுதிமொழி மீறப்பட்டு, ஆட்சி மொழி – அலுவல் மொழி என்ற வகையில் இந்தி மட்டுமே ஆதிக்கம் செலுத்தும் என்ற நிலை 1965-ஆம் ஆண்டு இந்தியாவில் உருவான போது, அதன் பாதிப்பு எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை முதலில் எச்சரித்த மாநிலம் தமிழ்நாடுதான். எச்சரித்தது மட்டுமல்ல, 'தமிழ் வாழ்க..இந்தி ஒழிக' என உச்சரித்தபடியே தன் உடலுக்குத் தானே தீ வைத்துக்கொண்டு மொழி காக்கும் போரில் உயிர் ஈந்த தியாக வரலாறும் தமிழ்நாட்டிற்குரியது.

> **தமிழ்நாடு காட்டுகின்ற பாதையே ஒவ்வொரு மாநிலமும் தன் தாய்மொழியைக் காப்பதற்கான பாதை.**

கீழப்பழுவூர் சின்னசாமி, கோடம்பாக்கம் சிவலிங்கம், விருகம்பாக்கம் அரங்கநாதன், கீரனூர் முத்து, சத்தியமங்கலம் முத்து, விராலிமலை சண்முகம், அய்யம்பாளையம் வீரப்பன், பீளமேடு தண்டபாணி, மயிலாடுதுறை சாரங்கபாணி எனத் தமிழ் இளைஞர்கள் தீக்குளித்தும், நஞ்சு அருந்தியும் இந்தித்திணிப்பை எதிர்த்து, தாய்மொழி காத்திட தங்கள் இன்னுயிர் ஈந்தனர். சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர் சிவகங்கை இராசேந்திரன் காவல்துறையின் துப்பாக்கித் தோட்டாவுக்கு, தன் மார்பு காட்டி வீரச்சாவு அடைந்தார். கோவை, பொள்ளாச்சி உள்பட தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் காவல்துறையும், துணை ராணுவமும் நடத்திய வேட்டையில், மொழி காக்கும் போரில் ஈடுபட்ட இளைஞர்களும் மாணவர்களும் துடிக்கத் துடிக்கக் கொல்லப்பட்டனர்.

கொந்தளித்துக் கிளர்ந்தெழுந்த மாணவப் பட்டாளத்தைத் தூண்டி விடும் வகையில் எழுதியதாகவும் பேசியதாகவும் குற்றம்சாட்டப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞரை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை தனிமைச் சிறையில் அடைத்தனர். அதே சட்டத்தில் முரசொலி மாறன் அவர்களும் கைது செய்யப்பட்டார். பேரறிஞர் அண்ணா உள்பட கழகத்தினர் களம் கண்டனர். சிறை சென்றனர். தமிழ்நாட்டு மக்களின் தாய்மொழி உணர்வுத் தீ, ஆந்திரா தொடங்கி அசாம் வரையிலும் பரவியது. அதன்பிறகே, இந்தித் திணிப்பு முறியடிக்கப்பட்டு, இந்திய ஒன்றிய

> **தமிழ்நாடு வகுத்த பாதையில் மற்ற மாநிலங்களும் தங்கள் தாய்மொழியைக் கட்டாயமாக்கும் உத்தரவை வெளியிட்டு வருகின்றன.**




தொடர்ச்சி 3–ஆம் பக்கம்